**கவனிக்க.**- 07.07.2017 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி IV(அ) பிரசுரிக்கப்படவில்லை.

**கவனிக்க.**- இவ்வர்த்தமானியின் பகுதி VI இல் 2017 ஆம் ஆண்டிற்கான பொலநறுவை நீதாசன வலயத்திற்குரிய யூரிமார் பெயர்ப்பட்டியலொன்று சிங்களம், தமிழ் ஆகிய மொழிகளில் பிரசுரிக்கப்படுகின்றது.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2028 - 2017 ජූලි මස 14 වැනි සිකුරාදා - 2017.07.14

*2028 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு யூலை மாதம் 14 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 1236 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 1240 |


**கவனிக்க.**- (i) மாகாண சபைத் தேர்தல்கள் (திருத்தம்) சட்டமூலம் 2017, யூலை மாதம் 07 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

(ii) சிட்னி ஜயரத்ன மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2017, யூலை மாதம் 07 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

(iii) ஜே. ஸ்ரீ ரங்கா மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2017, யூலை மாதம் 07 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி.வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2017, ஓகத்து மாதம் 04 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2017, யூலை மாதம் 21 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2017 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

1233 - B81188 - 5,403 (2017/07)

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிச் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப்படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சாதிகாரி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை ஆணைக்குழுவால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## அரசாங்க சேவைகள் ஆணைக்குழு

ஆரம்பக் கைத்தொழில் அமைச்சு

### சட்ட உத்தியோகத்தர் (ஒப்பந்த) பதவி

ஆரம்பக் கைத்தொழில் அமைச்சில் சட்ட உத்தியோகத்தர் (ஒப்பந்த) பதவி வெற்றிடத்துக்குக் கீழே குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்ட இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. **பதவிக்குரிய பொதுவான கடமைகள் பற்றிய விபரங்கள்.**- அமைச்சுக்கு ஏற்புடையதான சட்ட அலுவல்கள், அமைச்சின் விடயப் பரப்புக்குரிய நிறுவனங்களின் சட்டமூலங்கள், ஒழுங்குவிதிகள் ஆகிய ஆவணங்களைத் தயாரித்தல் மற்றும் அபிவிருத்திப் பணிகளில் சட்டம் சார்ந்த அலுவல்கள் தொடர்பிலான ஆலோசனைகளை வழங்கல் போன்ற கடமைகள் ஒப்படைக்கப்படுகின்ற சேவை வகையைச் சார்ந்ததாகும்.

2. **சேவை நிபந்தனைகள்.**- ஒப்பந்த அடிப்படையில் 03 ஆண்டு காலத்திற்காக ஆட்சேர்க்கப்படும் என்பதோடு செயலாற்றுகையைப் பொறுத்து ஆண்டுதோறும் சேவை நீடிப்பு வழங்கப்படும். அரச சேவை ஊழியர் சேமலாப நிதியத்திற்கான பங்களிப்பைக் கொண்டது.

3. **வயதெல்லை.**- விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதிக்கு 21 வயதுக்குக் குறையாதவராகவும் 35 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

4. **மாதாந்த சம்பளப் படிநிலை.**- 2016.02.25 ஆந் திகதிய 03/2016 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் அட்டவணை I இன் பிரகாரம் இப்பதவிக்கான ஆரம்ப நேரொத்த சம்பளப் படிநிலை ரூபா 47,615 ஆகுமென்பதோடு, மேற்படி சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கமைய அதன் அட்டவணை II இன் பிரகாரம் SL 1 - 2016 சம்பளக் குறியீட்டுக்கு உரித்தான ஆரம்ப சம்பளப் படிநிலைக்கு இணங்க சம்பளம் செலுத்தப்படும்.

5. **கல்வி/ தொழில் தகைமைகள்.**- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக்கழகத்திலிருந்து சட்டம் தொடர்பிலான பட்டத்தைப் பெற்றிருத்தல் மற்றும் உயர் நீதிமன்ற சட்டத்தரணியாகச் சத்தியப்பிரமாணம் செய்திருத்தல்.

6. **அனுபவம்.**- சத்தியப்பிரமாணம் செய்ததன் பின்னர் சட்டத்தரணியொருவராக 03 ஆண்டுகளுக்குக் குறையாத முனைப்புமிக்க தொழில்சார் அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

7. **ஏனையவை.**- ஆங்கில மொழித் தேர்ச்சி மேலதிகத் தகைமைகளாகும்.

8. **சேவைக்கான ஆட்சேர்ப்பு நடைமுறை.**- மேற்படி தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள விண்ணப்பதாரர்களில், பகிரங்க சேவைகள் ஆணைக்குழுவின் அங்கீகாரத்தின்படி நியமிக்கப்படும் நேர்முகப் பரீட்சைக் குழுவொன்றின் மூலம் நடத்தப்படும் தகுதிகளை மதிப்பீடு செய்யும் நேர்முகப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் அதிக புள்ளிகளைப் பெறுகின்ற விண்ணப்பதாரர் வெற்றிடத்துக்காக ஆட்சேர்க்கப்படுவார். இதன்போது பகிரங்க சேவைகள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட கீழே குறிப்பிடப்பட்டுள்ள புள்ளிகள் வழங்கும் நடைமுறைக்கிணங்க தகுதிகளை மதிப்பீடு செய்யும் நேர்முகப் பரீட்சை நடத்தப்படும்.

**கட்டமைப்பு ரீதியிலான நேர்முகப் பரீட்சைக்குக் கீழே குறிப்பிடப்பட்டுள்ள புள்ளிகள் வழங்கும் நடைமுறை அடிப்படையாகக் கொள்ளப்படும் :**

| விடயம் | | அதிகூடிய புள்ளிகள் |
|---|---|---|
| 01 **மேலதிக கல்வித் தகைமைகள்** | | 20 |
| அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக்கழகத்திலிருந்து பெறப்பட்ட சட்டம் தொடர்பிலான பட்டம் | | |
| - முதலாம் வகுப்பு சித்திக்கு | 20 | |
| - இரண்டாம் வகுப்பு சித்திக்கு | 15 | |
| - இரண்டாம் வகுப்பு கீழ்மட்ட சித்திக்கு | 10 | |

| | விடயம் | | அதிகூடிய புள்ளிகள் |
|---|---|---|---|
| | சட்டக் கல்லூரியின் இறுதி ஆண்டு முதலாம் வகுப்பு சித்திக்கு<br>சட்டக் கல்லூரியின் இறுதி ஆண்டு இரண்டாம் வகுப்பு சித்திக்கு | 15<br>10 | |
| | **குறிப்பு**.- கௌரவ சித்தியுடன் இறுதிப் பரீட்சையில் சித்தியடைந்திருப்பின் மாத்திரம் 10 புள்ளிகள் வழங்கப்படல் வேண்டும். (அதிகூடிய தகைமைக்கு மாத்திரம் புள்ளிகள் வழங்கப்படும் - பட்டம் அல்லது சட்டக் கல்லூரி தகைமைகளில் ஒன்றுக்கு மாத்திரம்) | | |
| | அங்கீகரிக்கப்பட்ட ஒரு நிறுவனத்தினால் வழங்கப்படும் குறித்த துறை தொடர்பிலான ஓர் ஆண்டுக்குக் குறையாத பட்டப் பின்படிப்பு டிப்ளோமாவுக்கு அல்லது பின்படிப்பு சட்ட டிப்ளோமா பாடநெறிக்கு (ஒரு டிப்ளோமாவுக்கு 05 புள்ளிகள் வீதம்) | 10 | |
| 02 | **மேலதிக தொழில்சார் அனுபவம்** | | 35 |
| | சட்டத்தரணியாக அரச சேவையில் அல்லது தனியார் சேவையிலான அனுபவம் 06 மாதத்திற்கு மேல் மற்றும் ஓர் ஆண்டுக்குக் குறைவு - 02 புள்ளிகள் | | |
| | ஓர் ஆண்டுக்கு 05 புள்ளிகள் வீதம் கூடியபட்சம் 35 புள்ளிகள் (அடிப்படைத் தகைமைகளைப் பெறுவதற்குத் தேவையான சட்டத்தரணியாகச் செயலாற்றிய 03 ஆண்டு சேவைக்காலம் தவிர்ந்த) | | |
| | (20 ஆண்டுகளுக்குக் குறையாத சேவைக்காலத்தை நிறைவு செய்துள்ள சட்டத்தரணி அல்லது சனாதிபதி சட்டத்தரணி அல்லது நீதிபதி ஒருவரிடமிருந்து பெறப்பட்ட சான்றிதழின் மூலம் மேலதிக அனுபவம் உறுதி செய்யப்படுதல் வேண்டும்.) | | |
| 03 | **மொழித் தேர்ச்சி** | | 20 |
| | ஆங்கில மொழி மூலம் கற்ற பட்டப் பின்படிப்பு பட்டம்/பட்டம்/பட்டப் பின்படிப்பு சட்டமாணிப் பட்டம்<br>(குறித்த பரீட்சை வினாத்தாள்கள் அனைத்துக்கும் ஆங்கில மொழி மூலம் விடையளித்திருத்தல் வேண்டும்.) | 20 | |
| | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக் கழகத்தில் அல்லது அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு நிறுவனத்தில் ஆங்கில மொழி டிப்ளோமா பாடநெறிக்கு (01 ஆண்டு அல்லது 1,500 மணித்தியாலம்) | 10 | |
| | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக் கழகத்தில் அல்லது அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு நிறுவனத்தில் ஆங்கில சான்றிதழ் பாடநெறிக்கு<br>- 06 மாதம்/720 மணித்தியாலம்<br>- 03 மாதம்/360 மணித்தியாலம் | <br><br><br>07<br>05 | |
| 04 | **தகவல் தொழில்நுட்பம்/கணினி விஞ்ஞானம் தொடர்பில் பெற்றுள்ள தகைமை** | | 20 |
| | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக் கழகத்தின் பட்டத்திற்காக தகவல் தொழில்நுட்பத்தை பிரதானமானதொரு பாடமாகக் கற்றிருத்தல் | 20 | |

| விடயம் | | அதிகூடிய புள்ளிகள் |
|---|---|---|
| அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு நிறுவனத்தில் 01 ஆண்டுக்குக் குறையாத தகவல் தொழில்நுட்பம் தொடர்பிலான டிப்ளோமா பாடநெறிக்கு அல்லது அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு நிறுவனத்தில் 1,500 மணித்தியாலங்களுக்கான தகவல் தொழில்நுட்பம் பற்றிய சான்றிதழ் பாடநெறிக்கு | 10 | |
| - 06 மாதம்/720 மணித்தியாலம் | 07 | |
| - 03 மாதம்/360 மணித்தியாலம் | 05 | |
| 06 **நேர்முகப் பரீட்சையில் வெளிக்காட்டும் திறமை** | | 05 |
| **முழு மொத்தம்** | | 100 |

**விண்ணப்பிக்க வேண்டிய முறை**.- அனைத்துத் தகவல்களையும் உள்ளடக்கியதாக இவ்வறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்துக்கமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தை பிறப்புச் சான்றிதழின் பிரதி, தேசிய ஆள் அடையாள அட்டையின் பிரதி, கல்வித் தகைமைகள், தொழில்சார் தகைமைகள் மற்றும் சேவை அனுபவத்தை உறுதிப்படுத்துகின்ற சான்றிதழ்களின் பிரதிகள் ஆகியவற்றுடன் 2017.07.28 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக "செயலாளர், ஆரம்பக் கைத்தொழில் அமைச்சு, 16 ஆவது மாடி, 'சுஹுருபாய', பத்தரமுல்லை" எனும் முகவரிக்குப் பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும். மேற்படி திகதிக்குப் பின்னர் கிடைக்கின்ற எந்தவொரு விண்ணப்பமும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. விண்ணப்பங்கள் அனுப்பப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "சட்ட உத்தியோகத்தர் (ஒப்பந்த) பதவிக்கு ஆட்சேர்த்தல்" எனத் தெளிவாகக் குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும்.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளையின் பிரகாரம்,

செயலாளர்,
ஆரம்பக் கைத்தொழில் அமைச்சு.

ஆரம்பக் கைத்தொழில் அமைச்சு,
16 ஆவது மாடி,
'சுஹுருபாய',
பத்தரமுல்லை.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**ஆரம்ப கைத்தொழில் அமைச்சு**

சட்ட உத்தியோகத்தர் (ஒப்பந்த) பதவிக்கான விண்ணப்பம் [ ]

(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

1. முதலெழுத்துக்களுடன் பெயர் (திரு./திருமதி/செல்வி) :
தமிழில்/சிங்களத்தில் :----.
ஆங்கில பெரிய எழுத்துக்களில் :----.

1.1 முதலெழுத்துக்களால் குறிக்கப்படும் பெயர்கள் (தெளிவான எழுத்துக்களில்) :
தமிழில்/சிங்களத்தில் :----.
ஆங்கில பெரிய எழுத்துக்களில் :----.

2. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் : [ | | | | | | | | | ]

3. பிறந்த திகதி :

ஆண்டு : [ | | | ] மாதம் : [ | ] திகதி : [ | ]

3.1 விண்ணப்ப இறுதித் திகதிக்கு வயது :

வருடங்கள் : [ | ] மாதங்கள் : [ | ] நாட்கள் : [ | ]

4. பால் :----.

5. சிவில் அந்தஸ்து :----.

6. நிரந்தர முகவரி (தெளிவான எழுத்துக்களில்) :

(i) தமிழில்/சிங்களத்தில் :----.
(ii) ஆங்கில பெரிய எழுத்துக்களில் :----.

7. தொலைபேசி இல. : வதிவிடம் :----.
கையடக்கம் :----.

8. ஆங்கில மொழியில் பெற்றுள்ள உயர் தகைமை :----.

9. பெற்றுள்ள பட்டம் தொடர்பான விபரம் :

(i) பல்கலைக்கழகம் :----.
(ii) பட்டம் பெற்ற ஆண்டு :----.
(iii) பெற்றுள்ள பட்டம் :----.
(iv) மொழி மூலம் :----.

9.1 பெற்றுள்ள பட்டப்பின் பட்டம் பற்றிய விபரம் :----.

10. சட்டத்தரணியாகச் சத்தியப்பிரமாணம் செய்த திகதி :----.

11. உயர் நீதிமன்ற சட்டத்தரணியாகச் செயலாற்றிய காலம் :----.

12. நீங்கள் ஏதேனும் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் நீதிமன்றத்தால் குற்றவாளி எனத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளீரா ? ஆம்/இல்லை :----.

12.1 ஆம் எனின், விபரங்களைச் சமர்ப்பிக்கவும் :----.

13. விண்ணப்பதாரியின் உறுதியுரை :

..................................... ஆகிய நான், இங்கு தரப்பட்டுள்ள தகவல்கள் யாவும் உண்மையானவை எனவும் சரியானவை எனவும் உறுதியுரைக்கின்றேன். நான் அரச சேவையில் இருந்து நீக்கப்பட்டோ, கருணை அடிப்படையில் செயற்றிறனின்மை காரணமாகக் கொண்டு ஓய்வுபெறச் செய்யப்படவோவில்லையெனவும், பதவியை விட்டுச்சென்றவராகக் கருதப்படவோ வில்லை எனவும் உறுதியுரைக்கின்றேன். இங்கு தரப்பட்டுள்ள ஏதேனும் விடயங்கள் பிழையானவை அல்லது பொய்யானவை என நான் தெரிவுசெய்யப்படமுன்னர் தெரியவரின் சேவைக்கு தகைமையற்றவனாவேன் எனவும், தெரிவுசெய்யப்பட்டதன் பின்னர் தெரியவரின், பதவி நீக்கத்துக்கு ஆளாவேன் என்பதையும் நான் நன்கறிவேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

14. விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்துதல் :

இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி ................................ என்பவரை நான், நன்கறிவேன் என்றும், அவர் 2017, ................................ ஆந் திகதி என் முன்னிலையில் மேலே 13 ஆம் பந்தியில் தனது கையொப்பத்தை இட்டார் எனவும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

உறுதிப்படுத்துபவரின் பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
(பதவி முத்திரை மூலம் உறுதிப்படுத்தவும்.)
திகதி :----.

15. திணைக்களத் தலைவரின் சிபாரிசு (அரசாங்க சேவை/மாகாண அரசாங்க சேவையில் உள்ளவர்களுக்கு மட்டும்) :

15.1 அலுவலரின் சுயவிபரக் கோவையின்படி விண்ணப்ப முடிவுத் திகதிக்கு அண்மிய ஐந்து வருட காலத்தில் அவரது சேவை நடத்தை, வரவு திருப்திகரமானது. எல்லா சம்பள ஏற்றங்களையும் பெற்றுள்ளார்/ பெறவில்லை.

15.2 மேற்படி பதவிக்கு தெரிவுசெய்யப்படின் தற்போதைய பதவியில் இருந்து இவ்வலுவலரை விடுவிக்க முடியும்./ முடியாது. விண்ணப்பத்தைச் சிபாரிசு செய்கின்றேன்./ செய்யவில்லை. ஒழுக்காற்று நடவடிக்கைகளுக்கு ஆளாகி உள்ளார்/ஆளாகவில்லை.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பமும்
பதவி முத்திரையும்.

திகதி :----.

7-460

## பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

**கல்வி அமைச்சு**

இலங்கை அதிபர் சேவைக்கான ஆங்கில மொழித் தேர்ச்சிப் பரீட்சை - 2017

இலக்கம் 1885/ 31 மற்றும் 2014.10.22 ஆந் திகதிய இலங்கை அதிபர் சேவைப்பிரமாணக் குறிப்பிற்கமைய இலங்கை அதிபர் சேவை உத்தியோகத்தர்களுக்கான ஆங்கில மொழித் தேர்ச்சிப் பரீட்சை 2017, ஒற்றோபர் மாதத்தில் கொழும்பில் நடைபெறும் என இத்தால் அறிவிக்கிறேன்.

2. அதிபர் சேவையின் சகல உத்தியோகத்தர்களையும் சேர்த்துக்கொள்ளும் தினம் தொடக்கம் (03) வருடங்களுக்குள் இணைப்பு மொழி தொடர்பான தேர்ச்சியினைப் பெற்றுக் கொள்ள வேண்டும். உத்தியோகத்தர் ஒருவர் க.பொ.த. (சா. த.) பரீட்சையில் ஆங்கில மொழிப் பாடத்திற்காக குறைந்தபட்சம் திறமைச்சித்தி அல்லது அதனை விட உயரிய சித்தியைப் பெற்றிருப்பின் ஆங்கில மொழிப் பரீட்சையில் சித்தியடையும் தேவையிலிருந்து விடுவிக்கப்படுவர். ஏனைய உத்தியோகத்தர்கள் அப்பரீட்சையில் சித்தியடைய வேண்டும்.

3. இப்பரீட்சைக்குரியதாக பாடவிதானம் மற்றும் ஏனைய ஒழுங்கு விதிகள் இலக்கம் 1885/ 31 கொண்ட 2014.10.22 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. விண்ணப்பதாரர்களின் வசதிக்காக இப்பாடவிதானம் மற்றும் ஏனைய ஒழுங்கு விதிகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

(அ) பரீட்சை ஒழுங்கு விதிமுறைகள் - பாடவிதானங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

(I) பொது ஆங்கிலம் (General English)
100 புள்ளிகள் - 03 மணித்தியாலம்

பாட விதானம்

Suitable level of proficiency on the following forms of grammar in the written language is expected from the candidate :-

- Tenses and Numbers
- Sentences (Simple/Compound/complex/ Compound Complex)
- Relative Clauses
- Reported Speech
- Adjectives and Adverbs
- Determiners
- Prepositions

The knowledge on the modern formats and styles of writing is tested in following area of study:-

- Summary writing
- Report writing
- Essay writing

4. சித்தியடைவதற்காக இப்பரீட்சையில் பரீட்சார்த்தி குறைந்தபட்சம் 40% அல்லது அதனை விடக்கூடிய புள்ளிகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4.1 பரீட்சைக்குத் தோற்றும் சகல விண்ணப்பதாரிகளினதும் பெறுபேறுகள் கொண்ட பெறுபேற்று ஆவணம் செயலாளர், கல்வி அமைச்சிற்கு அனுப்பப் படும். பரீட்சார்த்திகளுக்கு தனிப்பட்ட ரீதியில் பெறுபேறுகளை அனுப்ப பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடவடிக்கை எடுக்கப்படமாட்டாது.

5. இவ் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கமைய விண்ணப்பப்படிவத்தின் தலைப்பு இலக்கம் 01 தொடக்கம் 05 வரை முதலாவது பக்கத்திலும் எஞ்சியவை இரண்டாவது பக்கத்திலுமாக தயாரிக்க வேண்டியதுடன், அதற்குரிய தகவல்களை பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் மொழியில் தமது கையெழுத்தில் தெளிவாக உள்ளடக்கவேண்டும். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் போட்டோப் பிரதி ஒன்றை வைத்திருப்பது பயன்மிக்கதாக அமையும் என்பதை அறியத்தருகிறேன். மேலும் பூரணப்படுத்தப்படும் விண்ணப்பப்படிவம் பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கமைவானதா என்பது குறித்து விண்ணப்பதாரி விளக்கம் பெற்றிருக்கவேண்டும். அவ்வாறின்றேல் விண்ணப்பப்படிவம் நிராகரிக்கப்படும் என்பதையும் மேலும் அறியத்தருகிறேன். மேலும் விண்ணப்பப் படிவத்தை அனுப்புவதற்கு முன்னர் உரிய பரீட்சை கட்டணத்தைச் செலுத்தி அதன் விபரங்களை விண்ணப்பப்படிவத்தில் உள்ளடக்கி பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளதா என்பது தொடர்பில் மீள கவனம் செலுத்த வேண்டும். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவம் மற்றும் பரீட்சைக் கட்டணத்திற்குரிய பற்றுச்சீட்டுக்களின் போட்டோப் பிரதியை வைத்திருப்பது பயன்மிக்கதாக அமையும் என அறியத்தருகிறேன். விண்ணப்பப்படிவத்தை தயாரிக்கும் போது அவ்விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையின் பெயரை சிங்கள விண்ணப்பப்படிவங்களில் சிங்களத்திற்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் தமிழ் விண்ணப்பப் படிவங்களில் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடுவது அவசியம் என்பதை அறியத்தருகிறேன்.

6. பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை நடாத்தப்படுவதுடன் அதனை நடாத்துவதற்காக அவரினால் விதிக்கப்பட்டுள்ள சட்ட ஒழுங்குகளை பின்பற்ற பரீட்சார்த்தி கட்டுப் பட்டுள்ளார். பரீட்சைக்கான சட்ட ஒழுங்குகள் இவ்வறிவித்தலின் இறுதியில் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

7. விண்ணப்பப்படிவத்தை 2017, ஓகத்து மாதம் 14 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைக் கிளை, இலங்கை பரீட்சைத் திணைக்களம் தபால்பெட்டி இலக்கம் 1503, கொழும்பு, பத்தரமுல்லை, என்ற முகவரிக்கு கிடைக்கக் கூடியவாறு அதிபர்/ கோட்டக்கல்வி பணிப்பாளர்/ வலயக் கல்விப் பணிப்பாளர் அல்லது மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்/ மாகாணக் கல்விப் பணிப்பாளர் மூலம் அல்லது தங்களது சேவைப்பொறுப்பாளரினால் பதிவுத் தபால் மூலம் அனுப்ப வேண்டும். விணப்பப் படிவத்தை இட்டு அனுப்பும் கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயரைத் தெளிவாக குறிப்பிட வேண்டியதுடன் அன்றைய தினத்திற்குப் பின்னர் அனுப்பும் விண்ணப்பப் படிவங்கள் நிராகரிக்கப்படும்.

8. விண்ணப்பதாரிகளுக்கு அனுமதிப்பத்திரம் அனுப்பப் பட்டவுடன் அதுதொடர்பாகக் குறிப்பிட்டு பத்திரிகை அறிவித்தல் இலங்கை பரீட்சைத் திணைக்களத்தினால் பிரசுரிக்கப்படும். அறிவித்தல் வெளியிடப்பட்டு 02 அல்லது 03 நாட்களில் அனுமதிப்பத்திரம் கிடைக்காதபட்சத்தில் அது தொடர்பாக அறிவித்தலில் குறிப்பிடப்பட்டவாறு இலங்கைப் பரீட்சைத் திணைக்கத்திற்கு அறிவிக்க வேண்டும். அவ்வாறு அறிவிக்கும்போது விண்ணப்பதாரியின் முழுப்பெயர், முகவரி, தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் விண்ணப்பித்த பரீட்சையின் பெயரைக் குறிப்பிட வேண்டும். கொழும்பிற்கு வெளியிலுள்ள விண்ணப்பதாரியாயின் அவ்விபரங்களுடன் அனுமதிப்பத்திரத்தின் பிரதியை அனுப்புவதற்கு பெக்ஸ் இலக்கத்துடன் கோரிக்கை கடிதத்தை பெக்ஸ் மூலம் அனுப்புவது இது தொடர்பான தகவல்களை பெற்றுக் கொள்ள பயன் மிக்கதாக அமையும். பரீட்சை திணைக்களத்துடன் தொடர்பு கொள்ளும் வேளையில் தேவையாயின் விண்ணப்பதாரியின் பரீட்சார்த்தி அந்தஸ்தினை உறுதிப்படுத்துவதற்காக தாம் வைத்துக்கொண்ட விண்ணப்பப் படிவத்தின் போட்டோப் பிரதி, பரீட்சைக் கட்டணம் கொடுப்பனவிற்கு உரியதாயின் அதற்கான பற்றுச்சீட்டுப் பிரதியும், விண்ணப்பப்படிவத்தை தபாலில் அனுப்பும்போது பதிவு செய்யப்பட்ட பற்றுச்சீட்டினையும் தயாராக வைத்திருப்பது பயன்மிக்கதாகும். பரீட்சார்த்திக்கு பரீட்சைப் பிரவேசப் பத்திரத்தினை வழங்குவது பரீட்சைக்கு தோற்றுவதற்கு சகல தகைமைகளையும் பூர்த்தி செய்வதாக ஏற்றுக்கொண்டல்ல என்பதனை கருத்தில் கொள்ள வேண்டும்.

9. விண்ணப்பப்படிவத்திலும் பரீட்சைக்கான அனுமதிப் பத்திரத்திலும் பரீட்சாத்தி ஒப்பமிட்டு தாபன பொறுப்பாளர் அல்லது அவரினால் அதிகாரம் வழங்கப்பட்ட உத்தியோகத்தர் ஊடாக உறுதிப்படுத்தப்பட்டிருக்க வேண்டும். பரீட்சார்த்தி தமக்கு பணிக்கப்பட்டுள்ள பரீட்சை மண்டபத்தில் உரிய பரீட்சை இலக்கத்தின் கீழ் பரீட்சைக்குத் தோற்ற வேண்டியதுடன் பரீட்சைத் தினத்தில் தமது ஒப்பத்தை உறுதிப்படுத்திய அனுமதிப்பத்திரத்தை பரீட்சை மண்டபப் பொறுப்பாளருக்கு கையளிக்க வேண்டும். தமது அனுமதிப்பத்திரத்தை சமர்ப் பிக்காத பரீட்சாத்திற்கு பரீட்சைக்குத் தோற்ற இடமளிக்கப்பட மாட்டாது.

10. பரீட்சை மண்டபத்தில் தமது அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக சாட்சி சமர்ப்பிப்பது பரீட்சார்த்தியின் பொறுப்பாகும். அதற்காக,

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆளடையாள அட்டை அல்லது,

(ii) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு மாத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும்.

11. பரீட்சைக் கட்டணம் :

(அ) இப்பரீட்சைக்காக அறவிடப்படும் கட்டணங்கள் எக்காரணம் கொண்டும் மீளச்செலுத்தப்படமாட்டாது என்பதுடன் வேறு எந்தவொரு பரீட்சைக் கட்டணத்திற்காகவும் மாற்ற இடமளிக்கப்பட மாட்டாது. மேலும் பரீட்சைக் கட்டணத்திற்காக காசுக்கட்டளை அல்லது முத்திரை பொறுப்பேற்கப் படமாட்டாது என்பதுடன் பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டின் போட்டோப் பிரதியை வைத்திருப்பது பயன்மிக்கதாகும்.

(ஆ) முதற் தடவையில் பரீட்சைக் கட்டணம் அறவிடப்பட மாட்டாது.

(இ) அதற்குப்பின்னர் ஒவ்வொரு தடவைகளுக்காகவும் 250.00 ரூபா வீதம் அறவிடப்படும்.

இப்பரீட்சைக் கட்டணம் பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பிற்கு 2003-02-13 இல் வைப்பிலிடக்கூடியவாறு நாட்டில் அமைந்துள்ள எந்தவொரு தபால் அலுவலகத்திற்கு செலுத்தி பெற்றுக் கொள்ளப்பட்ட பற்றுச் சீட்டினை விண்ணப்பப்படிவத்தில் உரிய இடத்தில் கழராது ஒட்டி அனுப்ப வேண்டும். பற்றுச் சீட்டின் போட்டோப் பிரதியினை வைத்திருப்பது பயன்மிக்கதாகும்.

12. பரீட்சை நடாத்துவது தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்ட ஒழுங்குகளுக்கு பரீட்சார்த்தி கட்டுப்படவேண்டும். இச்சட்டங்களை மீறும் பட்சத்தில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு அவர் உட்படவேண்டும் என்பதனை அறியத்தருகிறேன்.

13. இங்கு சிங்களம் மற்றும் தமிழ் மொழி மூலம் பிரசுரிக்கப்படும் அறிவித்தலில் வாசகங்களில் ஏதேனும் ஒவ்வாமை அல்லது தொடர்பின்மைகள் காணப்படும் பட்சத்தில் சிங்கள மொழி மூலமான அறிவித்தலே அமுலில் இருக்கும்.

சுனில் ஹெட்டிஆரச்சி,
செயலாளர்,
கல்வி அமைச்சு.

கல்வி அமைச்சு,
இசுருபாய,
பலவத்த.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை அதிபர் சேவைக்கான ஆங்கில மொழித் தேர்ச்சிப் பரீட்சை - 2017**

English Language Test for the Sri Lanka Principals Service - 2017

(அதிபர்/ கோட்ட அல்லது வலயக் கல்விப் பணிப்பாளர் / மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்/ மாகாணக் கல்விப் பணிப்பாளர் ஊடாக பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைக் கிளை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், தபால்பெட்டி இலக்கம் 1503, கொழும்பு, பத்தரமுல்லை என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பவும். பரீட்சையின் பெயரைக் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிட வேண்டும்)

1. (அ) முதலெழுத்துக்கள் இறுதியில் வரக்கூடியவாறு முதலெழுத்துக்களுடன் பெயர் : (முதலெழுத் துக்களுடன் ஆங்கில பெரிய எழுத்தில்)
(உ-ம் : GUNAWARDHANA, M.G.B.S.K)

(ஆ) முழுப் பெயர் (சிங்களம்/ தமிழில்) :----.

2. முகவரி :

(i) சொந்த :----.
(ii) அலுவலகம் :----.
(iii) அனுமதிப்பத்திரம் அனுப்பவேண்டிய முகவரி : ----.
(ஆங்கிலக் கெப்பிற்றல் எழுத்தில்)
(iv) கடமைத் தொலைபேசி இலக்கம் :----.

3. (i) தேசிய அடையாள அட்டை இல :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

(ii) பெண்/ஆண் (பால்) :
பெண் - 1
ஆண் - 0 ☐
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் இடவும்)

(iii) பிறந்த திகதி :

ஆண்டு : ☐☐☐☐ மாதம் : ☐☐ திகதி : ☐☐

4. அதிபர் சேவையின் வகுப்பு / தரம் :----.
பாடசாலை /அலுவலகம் :----.
மாகாணக் கல்வித் திணைக்களம்/ வலயக் கல்வி அலுவலகம் :----.

5. பாட இலக்கம் : ☐
(உரிய பாட இலக்கத்தைக் கூட்டினுள் குறிப்பிடவும்)

6. பரீட்சைக் கட்டணத்தை செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டின் விபரம் :

பற்றுச்சீட்டு இல :----.
தபால் அலுவலகம் :----.
திகதி :----.

| பற்றுச்சீட்டை இங்கே ஒட்டவும் |
|---|

மேற்கூறப்பட்ட தகவல்கள் உண்மையானதும் சரியானதும் என உறுதிசெய்கிறேன். மேலும் பரீட்சை நடாத்துவது தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்ட ஒழுங்கு விதிகளுக்கு நான் கட்டுப்படுகிறேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

பரீட்சை ஆணையாளர் நாயகம்,

மேலே குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சார்த்தி எனது பாடசாலை/ அலுவலகத்தின் உத்தியோகத்தர் என உறுதிப்படுத்துகிறேன். மேலும் பரீட்சார்த்தி பரீட்சைக் கட்டணத்தில் இருந்து

விடுவிக்கப்பட்டுள்ளார்/ பரீட்சாத்தி பரீட்சைக் கட்டணத்திற்கான பற்றுச்சீட்டை உரியவாறு ஒட்டியுள்ளதாகவும் உறுதிசெய்கிறேன்.

----,
அதிபர் /கோட்ட அல்லது வலயக் கல்விப் பணிப்பாளர்/ மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்/ மாகாணக் கல்விப் பணிப்பாளரின் கையொப்பம்.

(அதிபராயின் பாடசாலையின் பெயரைக் குறிப்பிடுக)

(பதவி முத்திரை மூலம் உறுதிப்படுத்தவும்)

முகவரி :----.
திகதி :----.
(பொருத்தமற்ற சொற்களை நீக்கவும்)

*07-382*

---

திருத்தம்

**வலுவாதார அபிவிருத்தி மற்றும் வன சீவராசிகள் அமைச்சு**

தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களம்

**இலங்கை தொழில்நுட்ப சேவையின் தரம் III அலுவலர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்தல்**

*2017.06.30 ஆந் திகதிய 2026 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு பகுதி I : தொகுதி (IIஅ)* வர்த்தமானியில் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் தலைப்பின்கீழ் பிரசுரிக்கப்பட்ட வலுவாதார அபிவிருத்தி மற்றும் வன சீவராசிகள் அமைச்சு, தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களத்தின் இலங்கை தொழில்நுட்ப சேவையின் தரம் III அலுவலர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான அறிவித்தலில் 7.3 ஆம் பகுதியை அடுத்து 7.4 மற்றும் 7.5 ஆகிய பின்வரும் பகுதிகள் உட்படுத்தப்படல் வேண்டும் :-

7.4 தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களத்தில் நிரந்தர திணைக்களப் பதவியொன்றில் உரிய துறையில் ஐந்து வருட செயற்றிறன்மிக்கதும் திருப்திகரமானதுமான சேவை அனுபவமுள்ள, பதவியில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளவர்கள் மாத்திரமே மேற்படி பதவிகளுக்கு மட்டுப்படுத்தப் பட்ட ஆட்சேர்ப்பின்கீழ் தகுதி பெறுவோராவர்.

7.5 வயதெல்லை.- உரித்தாக மாட்டாது.

கே. என். யாப்பா,
பணிப்பாளர் நாயகம்,
தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களம்.

*7-684*

---

திருத்தம்

**அரசாங்க நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு**

மாதிரி விண்ணப்பப்படிவம் கோரலுக்கான அறிவித்தலில் திருத்தம் செய்தல்

**இலங்கை பொறியியலாளர் சேவையின் III ஆம் தரத்திற்கு அலுவலர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கான போட்டிப் பரீட்சை -மட்டுப்படுத்தப்பட்டது**

2017.07.07 ஆந் திகதிய 2027 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி அறிவித்தலின் மூலம் பிரசுரிக்கப்பட்ட இலங்கை பொறியியலாளர் சேவையின் III ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப்பரீட்சை (2016/2017) மாதிரி விண்ணப்பப்படிவம் கோரலுக்கான அறிவித்தல் கீழ்வருமாறு திருத்தியமைக்கப்படுகிறது.

**1. திருத்த இலக்கம் 01**

மேற்குறித்த வர்த்தமானி அறிவித்தலின் 05 ஆம் பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பப்படிவம் கோரலுக்கான இறுதித் திகதி 2017.08.11 வரை இதன் மூலம் நீடிக்கப்படுகிறது.

**2. திருத்த இலக்கம் 02**

மேற்குறித்த வர்த்தமானி அறிவித்தலின் 06 ஆம் பக்கத்தில் இலக்கம் 07 இன்மூலம் குறிப்பிடப்பட்டுள்ள புள்ளி வழங்கும் நடைமுறை கீழ்வருமாறு திருத்தியமைக்கப்படுகிறது.

- திருத்தியமைக்க முன்னர்

| *தொடர் இல.* | *விடயம்* |
|---|---|
| 03 | **கல்வி மற்றும் பிற தகைமைகள் (உச்ச புள்ளிகள் 10)**<br>**கணினி அறிவு (உச்ச புள்ளிகள் 05)**<br>ஆறு (06) மாத காலத்திற்குக் குறையாத பாடநெறிக் காலத்துடன் அரசாங்கத்தினால் அங்கீகார மளிக்கப்பட்ட தகவல் தொழில்நுட்பம் தொடர்பான டிப்போளா பாடநெறியை திறம்பட பூர்த்தி செய்திருப்பின் 05 உச்ச புள்ளிகள் வழங்கப்படும். |

| *தொடர் இல.* | *விடயம்* |
|---|---|
| | மூன்று (03) மாத காலத்திற்குக் குறையாத பாடநெறி காலத்துடன் அரசாங்கத்தினால் அங்கீகாரமளிக்கப்பட்ட தகவல் தொழில்நுட்பம் **தொடர்பான சான்றிதழ் பாடநெறியை** திறம்பட பூர்த்தி செய்திருப்பின் 03 உச்ச புள்ளிகள் வழங்கப்படும்.<br><br>(ஒரு தகைமைக்கு மாத்திரம் புள்ளிகள் வழங்கப்படும். ஒரு அலுவலர் 02 சான்றிதழ் பாடநெறிகளை அல்லது அதற்கு கூடியவைகளை சமர்ப்பித்திருப்பின் உயர் தகைமையுடன் கூடிய ஒரு சான்றிதழ் பாடநெறிக்கு மாத்திரம் புள்ளிகள் வழங்கப்படும்.) |
| | **ஆங்கில மொழித் தேர்ச்சி (உச்ச புள்ளிகள் 05)**<br><br>பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகாரமளிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிடமிருந்து அல்லது அரசாங்கத்தினால் அங்கீகாரமளிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிடமிருந்து பெற்றுக் கொண்ட ஆங்கில மொழி தொடர்பான டிப்ளோமா பாடநெறி ஒன்றை திறம்பட பூர்த்தி செய்திருப்பின் 05 உச்ச புள்ளிகள் வழங்கப்படும்.<br><br>பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகாரமளிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிடமிருந்து அல்லது அரசாங்கத்தினால் அங்கீகாரமளிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிடமிருந்து பெற்றுக் கொண்ட ஆங்கில மொழி **தொடர்பான சான்றிதழ் பாடநெறி** ஒன்றை திறம்பட பூர்த்தி செய்திருப்பின் 03 உச்ச புள்ளிகள் வழங்கப்படும்.<br><br>(ஒரு தகைமைக்கு மாத்திரம் புள்ளிகள் வழங்கப்படும். ஒரு அலுவலர் 02 சான்றிதழ் பாடநெறிகளை அல்லது அதற்கு கூடியவைகளை சமர்ப்பித்திருப்பின் உயர் தகைமையுடன் கூடிய ஒரு சான்றிதழ் பாடநெறிக்கு மாத்திரம் புள்ளிகள் வழங்கப்படும்.) |

- திருத்தியமைக்கப்பட்ட பின்னர்

| *தொடர் இல.* | *விடயம்* |
|---|---|
| *03* | ***கல்வி மற்றும் பிற தகைமைகள் (உச்ச புள்ளிகள் 10)***<br>***கணினி அறிவு (உச்ச புள்ளிகள் 05)***<br><br>ஆறு (06) மாத காலத்திற்குக் குறையாத பாடநெறிக் காலத்துடன் அரசாங்கத்தினால் அங்கீகாரமளிக்கப்பட்ட தகவல் தொழிநுட்பம் தொடர்பான டிப்போளா பாடநெறியை திறம்பட பூர்த்தி செய்திருப்பின் 05 உச்ச புள்ளிகள் வழங்கப்படும்.<br><br>மூன்று (03) மாத காலத்திற்குக் குறையாத பாடநெறி காலத்துடன் அரசாங்கத்தினால் அங்கீகாரமளிக்கப்பட்ட தகவல் தொழிநுட்பம் **தொடர்பான சான்றிதழ் பாடநெறியை/டிப்போளா பாடநெறியை** திறம்பட பூர்த்தி செய்திருப்பின் 03 உச்ச புள்ளிகள் வழங்கப்படும்.<br><br>(ஒரு தகைமைக்கு மாத்திரம் புள்ளிகள் வழங்கப்படும். ஒரு அலுவலர் 02 சான்றிதழ் பாடநெறிகளை அல்லது அதற்கு கூடியவைகளை சமர்ப்பிப்பிருப்பின் உயர் தகைமையுடன் கூடிய ஒரு சான்றிதழ் படநெறிக்கு மாத்திரம் புள்ளிகள் வழங்கப்படும்.) |
| | ஆங்கில மொழித் தேர்ச்சி (உச்ச புள்ளிகள் 05)<br><br>பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகாரமளிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிடமிருந்து அல்லது அரசாங்கத்தினால் அங்கீகாரமளிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிடமிருந்து பெற்றுக் கொண்ட ஆங்கில மொழி தொடர்பான டிப்ளோமா பாடநெறி ஒன்றை திறம்பட பூர்த்தி செய்யதிருப்பின் 05 உச்ச புள்ளிகள் வழங்கப்படும்.<br><br>பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகாரமளிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிடமிருந்து அல்லது அரசாங்கத்தினால் அங்கீகாரமளிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிடமிருந்து பெற்றுக் கொண்ட ஆங்கில மொழி **தொடர்பான சான்றிதழ் பாடநெறி/ டிப்போளா பாடநெறி ஒன்றை** திறம்பட பூர்த்தி செய்யதிருப்பின் 03 உச்ச புள்ளிகள் வழங்கப்படும்.<br><br>(ஒரு தகைமைக்கு மாத்திரம் புள்ளிகள் வழங்கப்படும். ஒரு அலுவலர் 02 சான்றிதழ் பாடநெறிகளை அல்லது அதற்கு கூடியவைகளை சமர்ப்பித்திருப்பின் உயர் தகைமையுடன் கூடிய ஒரு சான்றிதழ் பாடநெறிக்கு மாத்திரம் புள்ளிகள் வழங்கப்படும்.) |

3. **திருத்த இலக்கம் 03**

மேற்குறித்த வர்த்தமானி அறிவித்தலின் 08 ஆம் பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 03 ஆம் பரீட்சை (சிவில்) பரீட்சையில் விருப்பத் தெரிவு பாடங்கள் கீழ்வருமாறு திருத்தியமைக்கப்படுகிறது.

- திருத்தியமைக்க முன்னர்

3 ஆம் பரீட்சை (சிவில்)

*விருப்பத்தெரிவு பாடங்கள்* - கீழே குறிப்பிடப்பட்டுள்ள பாடங்களுள் 01 பாடத்தில் சித்தியடைதல் வேண்டும் :-

| *பாடம்* | *பாட எண்* | *புள்ளிகள்* | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | *ஆண்டு* ............... | *ஆண்டு* ............... | *ஆண்டு* ............... | *ஆண்டு* ............... | *ஆண்டு* ............... | *ஆண்டு* ............... |
| அடிப்படை கட்டிட நிர்மாணிப்பு மற்றும் பேணல் | 05 | | | | | | |
| நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு | 06 | | | | | | |

- திருத்தியமைக்கப்பட்ட பின்னர்

3 ஆம் பரீட்சை (சிவில்)

*விருப்பத் தெரிவு பாடங்கள்* - கீழே குறிப்பிடப்பட்டுள்ள பாடங்களுள் 01 பாடத்தில் சித்தியடைதல் வேண்டும்.

| *பாடம்* | *பாட எண்* | *புள்ளிகள்* | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | *ஆண்டு* ............... | *ஆண்டு* ............... | *ஆண்டு* ............... | *ஆண்டு* ............... | *ஆண்டு* ............... | *ஆண்டு* ............... |
| சிவில் பொறியியல் II | 42 | | | | | | |
| வீதிகள் அமைத்தல் மற்றும் பேணல் | 43 | | | | | | |

4. **திருத்த இலக்கம் 04**

மேற்குறித்த வர்த்தமானி அறிவித்தலின் 07 ஆம் பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள திணைக்களத் தலைவரின் உறுதியுரை கீழ்வருமாறு திருத்தியமைக்கப்படுகிறது.

- திருத்தியமைக்க முன்னர்

***திணைக்களத் தலைவரின் உறுதியுரை***

தற்போது இத் திணைக்களத்தில் சேவையாற்றுகின்ற நீர்ப்பாசனத் திணைக்களத்தில் பொறியியல் உதவியாளர் சேவையின் அலுவலர் /புகையிரத திணைக்களத்தின் மேற்பார்வை முகாமைத்துவ சேவையின் அலுவலர் /இலங்கை தொழிநுட்ப சேவையின் தொழிநுட்ப அலுவலர் (முன்னர் ந.ம.தொ. சேவையின்) திரு/திருமதி/செல்வி .................................................. என்பரை இலங்கை பொறியியலாளர் சேவையின் III ஆம் தரத்திற்கு நியமிப்பதற்கு தகைமை பெற்றுள்ளதுடன், அவ் அலுவலரினால் சமர்ப்பிக்கப்பட்ட இவ் விண்ணப்பப்படிவத்தை உசிதமான நடவடிக்கையின் பொருட்டு சமர்ப்பிக்கின்றேன். மேலும், அவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எதுவும் எடுக்கப்பட்டுள்ளது /எடுக்கப்படவில்லை எனவும், எதிர்காலத்தில் அவ்வாறான எதுவித நடவடிக்கையும் எடுப்பதற்கான காரணிகள் முன்வைக்கப்பட்டுள்ளன/ முன்வைக்கப்படவில்லை எனவும் உறுதியுரைக்கின்றேன். (தேவையற்ற சொற்களை நீக்கிவிடவும்)

திகதி ..............................

.............................................................
கையொப்பம் மற்றும் உத்தியோகபூர்வ முத்திரை
(செயலாளர்/பிரதம செயலாளர்/திணைக்களத் தலைவர்).

- திருத்தியமைக்கப்பட்ட பின்னர்

**திணைக்களத் தலைவரின் உறுதியுரை**

தற்போது இத் திணைக்களத்தில் சேவையாற்றுகின்ற நீர்ப்பாசனத் திணைக்களத்தில் பொறியியல் உதவியாளர் சேவையின் அலுவலர் /புகையிரத திணைக்களத்தின் மேற்பார்வை முகாமைத்துவ சேவையின் அலுவலர் /இலங்கை தொழிநுட்ப சேவையின் தொழிநுட்ப அலுவலர் (முன்னர் ந.ம.தொ. சேவையின்) திரு/திருமதி/செல்வி .................................................. என்பரை இலங்கை பொறியியலாளர் சேவையின் III ஆம் தரத்திற்கு நியமிப்பதற்கு தகைமை பெற்றுள்ளதுடன், அவ் அலுவலரினால் சமர்ப்பிக்கப்பட்ட இவ் விண்ணப்பப்படிவத்தை உசிதமான நடவடிக்கையின் பொருட்டு சமர்ப்பிக்கின்றேன். மேலும், அவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எதுவும் எடுக்கப்பட்டுள்ளது /எடுக்கப்படவில்லை எனவும், எதிர்காலத்தில் அவ்வாறான எதுவித நடவடிக்கையும் எடுப்பதற்கான காரணிகள் முன்வைக்கப்பட்டுள்ளன/ முன்வைக்கப்படவில்லை எனவும் உறுதியுரைக்கின்றேன். (தேவையற்ற சொற்களை நீக்கிவிடவும்)

**விண்ணப்பப்படிவம் முறையாக அலுவலரினால் கையளிக்கப்பட்ட திகதி**: .....................................

திகதி ..............................

.....................................................................
கையொப்பம் மற்றும் உத்தியோகபூர்வ முத்திரை
(செயலாளர்/பிரதம செயலாளர்/திணைக்களத் தலைவர்)

மேற்குறித்த திருத்தங்களுடன் கூடிய விண்ணப்பப்படிவத்தினை அரசாங்க நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் தரவிறக்கம் செய்யலாம்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளையின் பிரகாரம்,

ஜே.ஜே. ரத்னசிறி,
செயலாளர்,
அரசாங்க நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு.

அரசாங்க நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07,
2017, யூலை 10.

7-805

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.